**மாகாண வீதிகள் முன்னேற்றச் செயற்திட்டம் -(மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்கள்) -2011**

**1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டம் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியுள்ளதெனவும் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்பதும்

(இ) 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விசேட யென் கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளிப்புக்கள் என்பன செயற்திட்டம் பேணியுள்ள ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியுள்ளன என்பதும்

எனது அபிப்பிராயமாகும்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

## 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 571,861,200 ஆகவும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 9,002,139,143 ஆகவும் காணப்பட்டன. மீளாய்வாண்டிற்கான செலவினம், 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு என்பன கீழே தரப்படுகின்றது.

| **செலவின விடயம்** | **2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | **2010 திசெம்பர் 31 வரையான செலவினம்** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| சிவில் வேலைகள் | 483,633,113 | 6,614,695,346 | 7,098,328,459 |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | - | 117,493,799 | 117,493,799 |
| மோட்டார் வாகனங்கள் | - | 48,257,308 | 48,257,308 |
| ஆலோசனைக் கட்டணம் | - | 1,040,816,130 | 1,040,816,130 |
| செயற்திட்ட நிர்வாகக் கிரயம் | 8,106,079 | 226,609,246 | 234,715,325 |
| கடன் வட்டி | 80,122,008 | 382,137,104 | 462,259,112 |
| விசேட (யென்) கணக்கிற்கான சேவைக் கட்டணங்கள் | - | 269,010 | 269,010 |
| | 571,861,200 | 8,430,277,943 | 9,002,139,143 |

## 2.2 விசேட யென் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விசேட (யென்) கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | ஜப்பான் யென் | ரூபா |
|---|---|---|
| 2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 97,914,323 | 133,271,185 |
| கூட்டு: | | |
| மீள் நிரப்பல்கள் | 225,776,140 | 302,540,028 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 109,074 |
| | 323,690,463 | 435,920,287 |
| கழி: | | |
| பற்றுதல்கள் | 321,699,674 | 432,999,999 |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,990,789 | 2,920,288 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 43,098,000 தொகை, ரூபா 796,299 தொகை மற்றும் ரூபா 2,740,340 தொகைகளான முறையே வாகனம், தளபாட உபகரணம் மற்றும் பொறி இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் எஸ்எல் பீ-96 செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் செயற்திட்டத்தின் சொத்தாக தொடர்ந்து காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) குறைவான செயலாற்றல் மற்றும் சட்டரீதியான செயற்பாடுகளின் காரணமாக வீதிப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்களுக்காக கைளிக்கப்பட்ட நான்கு ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் ரூபா 03 மில்லியன் படி ரூபா 06 மில்லியன் முற்பணம் 2011 திசெம்பர் 27 ஆந் திகதி சட்டரீதியான செயற்பாடுகளுக்காக மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைகளுக்காக செலுத்தப்பட்டிருந்த

போதிலும் அந்த சட்டரீதியான செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றல் 2012 செப்தெம்பர் வரை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஒப்பந்தங்களை இரத்துசெய்தல்**

(i) எஸ்1கேஜீ2- ஏ ஆம் இலக்க பொதியின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 208.2 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் குறைவான முன்னேற்றம் காரணமாக சப்ரகமுவ மாகாண, மாகாண செயற்திட்ட பணிப்பாளரினால் 2008 காலப்பகுதியின் போது இரத்துசெய்யப்பட்டிருந்தது. நிர்மாண உத்தரவாத நிதியத்தின் செயலாற்றல் முற்பணக் கொடுப்பனவு பிணை முறியிலிருந்து ரூபா 33.4 மில்லியன் காசாக்கலிற்காக வேண்டுதல் செய்யப்பட்டிருந்த போதிலும் சட்ட மா அதிபர் நாயக திணைக்களத்தின் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்திய பின்னரும் கூட சாதகமான முடிவெதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் 2012 ஒக்தோபர் 18 வரை முன்னேற்றம் எதுவும் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ii) எஸ்1ஆர்பீ2 ஆம் இலக்க பொதியின் கீழ் அமுலாக்கப்பட்ட ரூபா 253.6 மில்லியன் கிரயத்திலான ஒப்பந்தம் குறைவான முன்னேற்றம் காரணமாக 2008 யூலை 3 இலிருந்து இரத்துசெய்யப்பட்டிருந்தது. செயலாற்றல் மற்றும் முற்பணக் கொடுப்பனவு முறிகளிலிருந்து வங்கியை ரூபா 52.9 மில்லியன் கொடுப்பனவு செய்வதற்கு கோரப்பட்டிருந்த போதிலும் வங்கியானது எவ்வித கவனமும் செலுத்தியிருக்கவில்லை. எனினும் செயற்திட்டம் சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக சட்ட நடவடிக்கை ஆரம்பித்திருந்தது. ஆனால் 2012 ஒக்தோபர் 18 வரை முன்னேற்றம் எதுவும் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(iii) குறைவான செயலாற்றல் காரணமாக 2007 மே 9 இல் இரத்து செய்யப்பட்டிருந்த மற்றும் செயற்திட்டத்தால் செய்யப்பட்ட ரூபா 82.8 மில்லியன் நட்டத்திற்காகவும் எஸ்1ஆர்பீ1 ஆம் இலக்க பொதியின் கீழ் ரூபா 264.8 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம்

தொடர்பான ஒப்பந்தகாரரால் ரூபா 300.1 மில்லியன் தொகை கோரி நடுவர் ஊடாக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவ்வழக்கு 2012 ஒக்தோபர் 18 வரை நிலுவையில் உள்ளது.

(iv) தனியார் ஒப்பந்தகாரரிற்கு வழங்கப்பட்டிருந்த சீ1கேடி1 ஆம் இலக்க வீதிப் பொதியின் கீழ் ரூபா 276.1 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் ஒப்பந்தத்தின் செயலாற்றல் இன்மை காரணமாக 2007 யூன் 05 இல் செயற்திட்டத்தால் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் வங்கி உத்தரவாதம் மற்றும் செயலாற்றல் பிணைமுறி என்பவற்றை காசாக்கிய பின்னர் ரூபா 69 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் மேன் முறையீட்டு மத்தியஸ்தர் சபையில் அவரிற்கு ஏற்பட்ட நட்டத்திற்காக ரூபா 211.5 மில்லியன் கோரி வழக்குத் தொடுத்திருந்ததுடன் செயற்திட்டமானது மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக இழப்பீடாக ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 108 மில்லியன் தொகையை மேலும் கோரியிருந்தது. இவ்வழக்கு 2012 ஒக்தோபர் 18 வரை நிலுவையில் உள்ளது.